RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1962

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்




OPEN ACCESS

# ஐங்குறுநூறு - குறிஞ்சித் திணையில் அறம் சார்ந்த பதிவுகள்

**சு. தீபலட்சுமி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Virtue-Related Entries in Kurinjithinai and Ainkurunuru

**S. Deepalakshmi** [a, *]

[a] Research Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women, Perambalur-621212 Tamil Nadu, India

* Corresponding Author: tamildeepa.s@gmail.com

Received: 30-08-2022
Revised: 03-10-2022
Accepted: 26-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

People of Sangam era gave importance to moral deeds and they valued it. During Sangam era man expressed his likes and dislikes indirectly to the elders. The poets of the Sangam period gave importance to chastity in their songs. The literary songs of Sangam era picturize the life style of the ancient Tamil people. Many moral values and ideas are given by the writers in Ainkurunuru and Kurinjithinai. If a man fails to follow morality in his life then all his gloriness will disappear. A man can be a great teacher only if he maintains moral and cultural values. Learning the virtues that bring happiness in a man's life and following its path adds beauty to his life. A man should live like a swan and read good books which contains moral values. All these things are conveyed in the literary songs of Sangam period. Virtue makes a better human being and is more important to human life.

**Keywords:** Ainkurunuru, Kurinjithinai, Virtue, Sangam era

## முன்னுரை

சங்ககால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைவது பத்துப்பாட்டு, எட்டுத்தொகையும் ஆகும். சங்க இலக்கிய நூல்கள் மக்களின் வாழ்வியல் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அகம், புறம் எனப்பகுக்கப்பட்டன. அகம் எனப்படுவது தலைவன், தலைவியின் இல்லற வாழ்வையும், புறம் எனப்படுவது தலைவனது வீரம், கொடை, புகழ் போன்ற உன்னதப்பண்பு நிறைந்த வாழ்வைப் பற்றியதாகும். இந்த ஒழுக்க வாழ்வில் "அறம்" என்பதற்கு கடமை, ஒழுக்கம், அன்பு எனப் பல பொருள் உண்டு. தனிப்பட்ட வாழ்க்கைக்கும், சமூக வாழ்கைக்கும் என மக்கள் வகுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே அறமாகும். அவற்றில் "அறத்தோடு நிற்றல்" என்பது களவு வாழ்வில் மிகுந்த நயம் சேர்ப்பதாக அமைகிறது. தலைவியின் களவு ஒழுக்கத்தை முறையாக வெளிப்படும் தன்மையை அகப்பொருள் இலக்கணத்தில் "அறத்தொடு நிற்றல்" என வழங்குவர்.

## ஐங்குறுநூறு நூற்குறிப்பு

ஐங்குறுநூறு என்னும் நூல் சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. மூன்று அடிச்சிற்றெல்லையும், ஆறடிபேரெல்லையும் கொண்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மருதம்,

நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் ஐந்து நிலத்தில் அமையும் ஐந்து ஒழுக்கங்களைப் பற்றிய பாடல்களைக் கொண்டது.

ஒவ்வொரு திணைக்கும் நூறுபாடல்கள் என்ற வகையில் பாடல்களின் எண்ணிக்கை ஐந்நூறாகும். ஒவ்வொரு நூறு பாடலும் பத்துப்பத்தாகப் பகுக்கப்பட்டு, அப்பத்துப்பாடலும் கருத்தாழமிக்க ஒரு தொடரால் பெயரிட்டு வழங்கப்படுகின்றது. இந்நூலுக்குப் பாரதம் பாடியபெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். எனவே கடவுள் வாழ்த்துடன் 501 பாடல்களைக் கொண்டுள்ளது. எனினும் 120, 130-ஆம் பாடல்கள் கிடைக்கவில்லை. மருதத்திணையை ஓரம்போகியாரும், நெய்தல் திணையை அம்மூவனாரும் குறிஞ்சித்திணையைக் கபிலரும், பாலத்திணையை ஓதலாந்தையாரும் முல்லைத் திணையைப் பேயனாரும் பாடியுள்ளனர். இதனை,

"மருதம் ஓரம்போகி நெய்தல்அம் மூவன்

கருதும் குறிஞ்சி கபிலர் - கருதிய

பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே

நூலையோ தைங்குறு நூறு"

என்னும் பழம் பாடல் குறிப்பிடுகின்றது (Puliyur Kesigan, 2010). ஐங்குறுநூற்றிணைத் தொகுப்பித்தவன் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் அரசனாவான். தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தி இந்நூலில் அமைந்துள்ளது.

## குறிஞ்சித் திணையின் சிறப்புகள்

குறிஞ்சிப் பாடல்களை இயற்றுவதில் மிகச் சிறந்தவர் கபிலர் ஆவார். ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லக் கபிலர் பாடியது குறிஞ்சிப்பாட்டு 26 அடிகளை உடையது. குறிஞ்சிப்பாட்டு அறத்தொடு நிற்றல் துறையில் அருமையாக அமைந்துள்ளது. அறத்தொடு நிற்றல், வரைவு கடாவுதல், இற்செறிப்பு, இரவுக்குறி, குறிஞ்சியைப்போற்றல், குறிக்கேட்டல், திணைப்புனம் காத்தல் முதலியன குறிஞ்சித்திணைக்குச் சிறப்பு சேர்க்கும் நிகழ்வுகளாகும்.

## அறத்தொடு நிற்றல்

அகத்திணை மாந்தர்களின் மன, மண ஒழுக்கங்களைக் களவு, கற்பு என்ற இரு பிரிவுகளில் அடக்குவர். இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றலாகும். தலைவியின் களவு ஒழுக்கத்தை, அதாவது பிறருக்குத் தெரியாமல் தலைவன், தலைவியின் மனங்கள் ஒன்று சேர்ந்ததை உண்மையோடு வெளிப்படுத்தலே அறத்தோடு நிற்றலாகும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என ஒவ்வொருவரும் அறத்தொடு நிற்பதுண்டு. அறத்தொடு நிற்றலின் விளைவு தலைவியை அவள் விரும்பிய தலைவனுடன் கற்பு வாழ்க்கையில் இணைப்பதாகும். தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்துவித்தலாகும்.

தலைவிக்கு உடனிருந்து பிறர் அறியாமல் களவுக் காதலுக்கு உதவுபவள் தோழியாவாள். களவுக் காதல் கற்பாக மாற வேண்டும், காதல் வெளிப்பட்டுத் திருமணம் நிகழ வேண்டும். ஆதலால் வாய்ப்பு ஏற்படும் பொழுது தோழி செவிலிக்குத் தலைவியின் காதலைக்குறிப்பாகப் புலப்படுத்துவாள். களவை வெளிப்படுத்துதல் என்று கூறாமல் "அறத்தொடு நிற்றல்" என்று பெயர் வைத்துள்ளது சங்க இலக்கிய சிறப்புகளுள் ஒன்றாகும். தலைவியின் கற்பு அறத்தைக் காப்பதற்காகக் களவு உண்மையை வெளிப்படுத்துவதால் இது அறத்தோடு நிலை என்று சொல்லப்படுகிறது.

## அறத்தொடு நிற்றலின் காரணம்

அறத்தொடு நிகழும் சூழலைப் பற்றி அகப்பொருள் விளக்கம் சிறப்பாகக் கூறியுள்ளது.

"ஆற்றுஊறு அஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்

வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்

ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே"

தலைமகன் களவின்கண் தன்னைக் காண வரும் வழியில் அவனுக்கு ஏற்படும் துன்பத்திற்குத் தலைவி அஞ்சுதல், தலைமகள் வரைவினைத் தம் பெற்றோரும், உறவினர்களும் ஏற்றுக் கொள்ளாமை, பிறர் வரைவிற்கு தம் பெற்றோர் உடன்படுதல், தலைவிக்கு வீட்டுக்காவல் மிகுதியாதல் ஆகிய இந்நான்கிடத்திலும் அறத்தொடு நிற்றல் நிகழும் (Thirugnanasambandam, 2010). களவின்கண் கூடியத் தலைவனோடு கற்பு வாழ்விலும் தலைவி கூடுவதே அறத்திற்கு மாறுபடாத நிலையாகும். இதன் பொருட்டு களவின்கண் பிறர் அறியாமல் கூடிய கூட்டத்தைத் தலைவி பிறர்க்கு வெளிப்படுத்தும் நிலையே அறத்தொடு நிற்றலாகும். "அறம்" என்பது "முறை" என்றும் பொருள்படும். தலைவி தன்னுடைய களவு நிலையைத் தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தமர்க்கு முறையாக அறிவித்தலாகும். எனவே தலைவி, தலைவனோடு தான் நுகர்ந்த களவுப்புணர்ச்சியை வெளிப்படுத்தி அத்தலைவனோடு வாழ்வதற்கு வித்திடும் நிலையே அறத்தொடு நிற்றலாகும்.

"தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்

பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்

நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு

நிற்கும் என்ப நெறிஉணர்ந் தோரே". (Thirugnanasambandam, 2010)

## அறத்தொடு நிற்றலின் பயன்

அறத்தொடு நிற்றலின் மூலம் தலைவன், தலைவியின் காதல் வெற்றி பெறும் திருமண நிகழ்ச்சி நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தலைவன், தலைவியின் அன்பு கலந்த காதல் வாழ்க்கையை நிலை பெறச் செய்து கற்பு வாழ்வை மலரச் செய்வதே அறத்தோடு நிற்றலின் பயன் ஆகின்றது. சுருங்கச் சொன்னால் களவைக் கற்பாக்கும் அருஞ்செயலே "அறத்தொடு நிற்றல்" எனப்படும். அகப்பொருள் இலக்கணத்தில் இடம்பெறும் தலைவி, தோழி, செவிலி முதலானோர் அவ்வாறு அறம் நிலை நிறுத்தச் செயல்படும் திறத்தை இப்பகுதியில் விளக்கமாகக் காண்போம்.

## தலைவி அறத்தொடு நிற்றல்

தலைவி தன் களவைப் பாங்கியிடத்துக் கூறுவது தலைவி அறத்தொடு நிற்றல் ஆகும்.

"கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்

கலுழ்தற் காரணம் கூறலும் தலைவன்

தெய்வம் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை

எய்தக் கூறலும் இகந்தமை இயம்பலும்

இயற்பழித்து உரைத்துழி இயற்பட மொழிதலும்

தெய்வம் பொறைகொளச் செல்வகுவம் என்றலும்

இல்வயின் செறித்தமை சொல்லலும் செவிலி

கனை இருள் அவன்வரக் கண்டமை கூறலும்

எனமுறை இயம்பிய ஏழும் புனையிழைத்

தலைவி அறத்தொடு நிலைதனக்கு உரிய."

தலைவி அறத்தோடு நிற்றற்குரிய இடங்களாக நம்பியகப் பொருள் ஆசிரியர் ஏழு இடங்களைக் குறிப்பிடுகின்றார். அவற்றை விளக்கமாகக் காண்போம் (Thirugnanasambandam, 2010). 1. தோழி கண்ணீரைத் துடைக்கத் தலைவி தான் அழுதற்குக் காரணம் கூறுதல். 2. தலைவன் தெய்வத்தைச் சான்றாக வைத்துத் தன்னை மணந்து கொள்ளும் உறுதி கூறியதை வெளிப்படுத்துதல். 3. அவ்வாறு கூறிய பிறகு தலைவன் தன்னை விட்டு நீங்கியதை தோழியிடம் கூறுதல். 4. தோழியானவள் தலைவனின் பண்புகளைப் பழித்துக் கூறதல்: அது கேட்ட தலைவி தலைவனது பண்புகளைப் புகழ்ந்துக் கூறுதல். 5. தெய்வத்தின் முன் சொன்ன சொல்லைக் காப்பாற்றாத தலைவனுக்கு அக்கொடுந்தெய்வத்தால் துன்பம் வராமல் காத்தல் வேண்டி அதனை வணங்கச் செல்லலாம் எனத் தலைவி தோழியிடம் கூறுதல். 6. தன் தாய் தன்னை வீட்டுக் காவலில் வைத்தாள் என்று தோழியிடம் கூறுதல். 7. செவிலித்தாய் இரவு நேரத்தில் தலைவன் வந்ததைப் பார்த்து விட்டாள் என்று தோழியிடம் கூறுதல். 8. இவை போன்ற இடங்களில் தலைவி அறத்தோடு நிற்பாள் என்று நம்பியகப் பொருள் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

## தோழி அறத்தோடு நிற்றல்

தலைவி வழி அறிந்த காதலை தோழி செவிலித்தாய்க்கு உரைப்பது தோழி (பாங்கி) அறத்தொடு நிற்றலாகும்.

"எறிவளை வேற்றுமைக்கு ஏதுவி னாவினும்

வெறிவிலக் கியவழி வினாவினும் பாங்கி

பூவே புனலே களிறே என்று இவை

ஏது வாகத் தலைப்பாடு இயம்பும்"

தோழி அறத்தொடு நிற்கக் கூடிய இடங்களாக நம்பியகப்பொருள் ஆசிரியர் ஐந்து இடங்களைக் குறிப்பிடுகிறார் (Thirugnanasambandam, 2010).

## செவிலி அறத்தொடு நிற்றல்

தோழியின் வழியாகத் தலைவியின் களவை அறிந்த செவிலி அதனை நற்றாய்க்குத் தெரிவிப்பது செவிலி அறத்தோடு நிற்றல் ஆகும்.

"மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினாவுழி

முன்னிலை மொழியால் மொழியும் செவிலி"

மின்னல் போன்ற இடையை உடைய தலைவியின் வேறுபாடு கண்டு நற்றாய் செவிலியை வினவிய இடத்து அச்செவிலித்தாய் தலைவியின் காதலை வெளிப்படையாகக் கூறுவாள் (Thirugnanasambandam, 2010).

## உடன் போக்கில் அறத்தோடு நிற்றற்கு உரியவர்கள்

"ஆங்குடன் போயுழி அறத்தொடு நிற்ப

பாங்கியும் செவிலியும் பயந்த தாயும்"

தலைமகனும் தலைமகளும் புணர்ந்து உடன்போக்கு சென்ற காலத்துத் தோழியும் செவிலியும் நற்றாயும் அறத்தொடு நிற்பர் (Thirugnanasambandam, 2010).

“ஒருபுணர்வு ஒழிந்தவற்று ஒருவழித் தணப்பவும்

வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரியவும்

இறைவனைச் செவிலி குறிவயின் காணவும்

மனைவயின் செறிப்பவும் வருத்தம் கூறின்

வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்

அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்”

தலைவியின் கூட்டத்திற்குத் தோழி துணையாய் நிற்கும் பாங்கியிற் கூட்டம் ஒழிந்த ஏனைய மூவகைப் புணர்ச்சிக்குப் பின் தலைவன் ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல், இரவில் காணவரும் தலைவனைச் செவிலிக் குறியிடத்துக் காணுதல், தலைவி தலைவனைக் காண முடியாதபடி கட்டுக்காவல் மிகுதல் ஆகிய இந்நான்கு செயல்களின் காரணமாகத் தான்படும் துன்பம் குறித்து சொல்லும் பொழுதும், சொல்லாமல் இருக்கும் பொழுதும் நிற்பாள் (Thirugnanasambandam, 2010).

“அன்னாய் வாழி வேண்டு அன்னை என்னை

தானும் மலைந்தான் எனக்கும் தழை யாயின

பொன்வீ மணியரும் பினவே

என்ன மரங்கொல் அவர்சார அவ்வே”

இப்பாடல் முன்நிற்போருக்கு கூற வேண்டியச் செய்தியை பிறருக்கு கூறுவார் போல் அதாவது தோழிக்கு கூறுவது போல் தலைவியானவள் செவிலிக்கு கூறி அறத்தொடு நிற்கின்றாள் (Puliyur Kesigan, 2010).

இதனையே நம்பியகப் பொருள் ஆசிரியர் “முன்னிலைப் புறமொழி” என்று குறிப்பிடுகின்றார். அன்னையே நான் சொல்வதை விரும்பிக்கேள். என் தலைவன் தானும் அணிந்து கொண்டான். எனக்கும் அணிவதற்குப் பயன்பட்டதோடு எனக்குத் தழையாடையகவும் உதவின. அவை பொன் போன்ற பூக்களையும், நீலமணி போன்ற அரும்புகளையும் உடையவை. அத்தகைய பூக்களையும், தழைகளையும் தருவனவாக அவன் மலைச்சாரலில் அமைந்தவை என்ன மரங்கள் என்று செவிக்கு கேட்கும்படி தலைவியானவள் முன்னிலைப் புறமொழியாக தோழியிடம் குறிப்பிடுகிறாள்.

“அன்னாய் வாழ வேண்டு அன்னை என் தோழி

நனிநாண் உடையவள் நின்னும் அஞ்சும்

ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்

மலர்ந்த மார்பில் பாயல்

துஞ்சிய வெய்யள் நோகோ யானே”

இப்பாடல் நம்பிகப்பொருள் நாயனார் குறிப்பிட்ட முன்னிலை மொழியால் தோழி தலைவியின் களவு வாழ்க்கையை செவிலிக்கு உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள் (Puliyur Kesigan, 2010).

## ஔவைப் பாடலில் அறத்தொடு நிற்றல்

“அகவன் மகளே! அகவன் மகளே!

மனவுக் கோப்பு பன்ன நல்நெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"

ஒரு குறிப்பிட்ட மலையைச் சார்ந்த தலைவன் ஒருவனை விரும்பினாள் தலைவி, செவிலித்தாய் தலைவியின் போக்கில் மாற்றத்தை உணர்கின்றாள். எனவே, குறத்தியை அழைத்துத் தலைவியின் மாற்றத்துக்குக் காரணம் அறியக் குறி கேட்கின்றாள். குறத்தி குறி கூறும் முன் வழக்கப்படி பல மலைகளையும் பற்றிப் பாடத் தொடங்குகிறாள். தலைவனுடைய மலையைப் பாடும் போது தோழிக் குறுக்கிட்டுக் கூறுகிறாள். "குறத்தியே பாடு, பாடு அவருடைய மலையை மட்டுமே பாடிக் கொண்டேயிரு" என்கிறாள் (Subramaniyan, 2010).

## முடிவுரை

தலைவியின் காதலைக் குறிப்பால் தோழி உணர்வாள், தோழி செவிலி நாற்றாயிடமும், நற்றாய் தந்தை மற்றும் செலிலியிடமும், தமையன்மாரிடமும் தலைவியின் காதலை கூறுவாள். பெற்றோர் சம்மதத்துடன் வரைவு நிகழ்வது உண்டு. அவர்கள் ஏற்றுக் கொள்ளவிட்டால் உடன்போக்கு நிகழ்வதும் உண்டு. இதுதான் சங்கால வாழ்வில் அறத்தொடு நிற்றல் என்ற பொருண்மையாகும். சங்கப் பாடல்களில் இவ்வாறு ஒவ்வொரு மாந்தரும் அறத்தொடு நின்றமையும், காதல் வெற்றிப்பட்ட முறையையும் புலவர்கள் மிக அழமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தியுள்ளனர். குறிஞ்சிப் பாடல்கள் பலவும் அறத்தொடு நிற்றல் முறையில் சார்ந்ததாகவே அமைகின்றது. தலைவி, தோழி, செவிலி மற்றும் நற்றாய் பலரும் அறத்தொடு நிற்பதற்கான காரணங்களையும், இதன்மூலம் ஏற்படும் பயன்களையும் கூறப்பட்டுள்ளன. இவற்றின் வகைகளையும், அவரவர்கள் அறத்தொடு நிற்கக் கூடிய சூழலையும் தன்மையையும் விளக்கிக் கூறப்படுகின்றன. சில நிலைகளில் தலைவன் பிரிவாலும், நற்றாயானவள் தலைவியின் களவு தெரிந்தமையால் வீட்டுக்காவல் வைப்பதன் மூலமாகவும் தலைவி கலங்குகிறாள். இதனை தோழி கண்டு அவளைத் தேற்றுவிக்கிறாள். அதன்பின் தலைவியின் உடல் நிலையைக் கண்டு செவிலி தெய்வக் கோளாறு என தவறாக உணர்ந்து வெறி நடத்துகிறாள். இந்த வெறியாடலை தோழி விலக்கி, தலைவியின் உண்மை நிலையையும் தலைவனின் உள்ளதப் பண்பையும் கூறித் தலைவிக்கு தலைவன் மேல் எப்படி காதல் பெருகியது என்பதையும் அறவழியில் நின்று செவிலிக்கு உணர்த்துகிறாள். அதன் பின், செவிலி நற்றாயிடமும் நற்றாய் தந்தை மற்றும் தமையன்மாரிடமும் கூறி தலைவியின் களவு வாழ்வைக் கற்பு வாழ்க்கையாக மாற்றுகின்றாள். இவர்களின் களவு வாழ்க்கை கற்பு வாழ்க்கையாக மாறுவதற்கு அறத்தொடு நிற்றல் பெருந்துணை புரிந்து நிற்கின்றது என்றே கூறலாம்.

## References


Puliyur Kesigan, (2010) Ainkurunuru, Paari Nilaiyam, Chennai, India.

Subramaniyan, S.V. (2010) Kurunthogai, Manivasakar Pathippagam, Chennai, India

Thirugnanasambandam, S. (2010) Akapporul Vilakkam, Kathir Pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License